நமது மாநில அரசு அதைப் பற்றிப் பரிசீலனை செய்தது. இப்போது அதிலே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியவற்றைப் பற்றி முடிவு செய்திருக்கிறோம்.

தீண்டாமை ஒழிப்பு

* 376 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தீண்டாமை ஒழிப்பினை தீவிரப்படுத்த தாலுக்கா அளவில் அரிசன நலக் குழுக்கள் அமைக்கத் திட்டமிட்டுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஆம்.

திரு. என் கிட்டப்பா: அத்தகைய குழுக்களில் எந்தெந்தத் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர்கள் பங்கு கொள்ள வகை செய்யப்பட்டிருக்கிறது? அந்தக் குழுவின் நடைமுறை வேலைத் திட்டத்தை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஒவ்வொரு பிர்க்காவிலும் ஒருவரைத் தேர்ந்தெடுத்து தாலுகா வாரியத்திற்கு உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளவும், போலீஸ் அதிகாரிகள் சிலரைச் சேர்த்துக் கொள்ளவும், அப்படி தீண்டாமை ஒழிப்பில் அக்கறையுள்ளவர்களைத் தேர்ந்தெடுப்பதில் தாலுகா வாரியத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எல்லாம் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து மாவட்ட வாரியத்தை அமைக்கவும், மாவட்ட வாரியத்தில் உள்ளவர்கள் எல்லாம் சேர்ந்து மாநில அளவில் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவும் வகை செய்து திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. தாலுகா குழுவில் இருப்பவர்கள் சார்பிலே அவர்கள் புகார்களை எடுத்துச் சொன்னாலும், அதைப் பற்றியும் விசாரணை செய்து உண்மைதானா என்று பார்த்து உண்மை என்று ஒத்துக்கொண்ட பிறகு அதை மேலே இருக்கும் குழுவுக்கு அனுப்புவார்கள். போலீசாரும் தகவல் கொடுப்பார்கள். போலீசாரும் நல்ல முறையில் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுப்பதற்கு இந்தக் குழு தன்னிச்சையாகச் சிபாரிசு செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் சரியாகச் செயல்படவில்லை என்று சொன்னால், மாநிலக் குழுவுக்கு அவர்கள் தெரிவிப்பார்கள். மாநில வாரியத்திற்கு நலத்துறை அமைச்சர் தலைவராக இருக்கிறார்கள்; ஐ.ஜி. அவர்கள் பொறுப்பாளராக இருக்கிறார்கள். சமூக நலத் துறைச் செயலாளர் அவர்கள் செயலாளராக இருக்கிறார்கள். ஆகவே, மேல் மட்டத்தில் இருக்கும் மாநிலக் குழுவில் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இ. எஸ். தியாகராசன் : தலைவரவர்களே, தீண்டாமை ஒழிப்பு பற்றி மக்களிடையே பிரசாரம் செய்ய செய்திப் படம் தயாரிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

1971 ஜூலை 22]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இப்போதே செய்திப் படங்களில் கூடுமான வரையில் தீண்டாமை ஒழிப்பு பற்றி பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, இந்த குழுக்களுக்கு நியமிக்கப்படுகிற தலைவர்கள் சமுதாய அடிப்படையில் நியமிக்கப் படுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அந்த தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலிருந்து தான் அந்த குழுக்களுக்கு தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குப் புது விடுதிகள்

*377 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971-ம் ஆண்டில் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்காக புதிதாக விடுதிகள் எவையேனும் திறக்க அரசு முடிவு செய்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அவை எந்தெந்த இடங்களில் திறக்கப் படும் ?

(உ) அவற்றில் எத்தனை மாணவ, மாணவிகள் தங்க அனுமதிக்கப்படுவார்கள் ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:

(அ) ஆம்.

(இ) & (உ) இந்த விஷயம் அரசின் பரிசீலனையில் உள்ளது. கூடிய சீக்கிரத்தில் ஆணை விடுக்கப்படும்.

திரு. கு திருப்பதி: தலைவரவர்களே, தாழ்த்தப்பட்டவர்கள் பள்ளிகளில் சேரும்போதும், கல்லூரிகளில் சேரும்போதும் கொஞ்சம் பணம் செலவழிக்க வேண்டியிருக்கிறது. அரசாங்கத்தால் கொடுக்கப்படும் பணம் போதுமானதாக இல்லாததால். முதலிலோ அல்லது கடைசியிலோ சிரமப்படுகிறார்கள். ஆகவே, ஹாஸ்டலில் இடம் இல்லாத மாணவர்களுக்கு தனியாக கட்டிடம் கட்டிக் கொடுக்க, வசதி செய்து கொடுக்க அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இப்போது பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் ஹாஸ்டல்கள் இருக்கின்றன. தனிப்பட்ட முறையில், நலத் துறையின் மூலமாக விடுதிகள் நடத்தப்படுகின்றன. அவைகளில் இடம் தரப்படுகின்றது. ஒவ்வொரு ஹாஸ்டலிலும் ஒரு ஹாஸ்டல் கமிட்டி என்று உருவாக்கி அதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர், தலைவராக இருந்து செயல்பட்டு வருகிறார்கள். கூடுமான வரையில் எல்லோருக்கும்